அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 08/2000

எனது இல.ஆ1/2/4
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
2000, செப்டம்பர் மாதம் 14 ஆந் திகதி

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**<u>அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.33/95 மற்றும் 15/96 நடைமுறைப்படும் திகதியை திருத்துதல்.</u>**

1995.11.14 ஆந் திகதிய 33/95 ஆம் இலக்க, 1996.06.18 ஆந் திகதிய 15/96 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. குறித்த சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளை 1995.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும் அன்று தொடக்கம் 1995.10.31 ஆந் திகதி வரை நிலுவை சம்பளம் வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

03. மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகையில் 33/95 மற்றும் 15/96 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும் உத்தியோகத்தர்களின் சம்பளம் 1995.01.01 ஆந் திகதியிலிருந்து திருத்தப்பட வேண்டியதுடன் 1995.01.01 ஆந் திகதி தொடக்கம் 1995.10.31 ஆந் திகதி வரை அவ் உத்தியோகத்தர்களுக்கு நிலுவைச் சம்பளம் கொடுபட வேண்டும். இந் நிலுவைச் சம்பளங்களை 2001 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்காக வேண்டிய நிதி ஒதுக்கீடுகளை செய்து கொள்ள வேண்டும்.

04. மேற் குறிப்பிட்டுள்ள கால வரையறையினுள் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வுச் சம்பளங்களை உரியவாறு மாற்றியமைக்க வேண்டியதுடன் திருத்தப்பட்ட ஓய்வுச் சம்பளங்களை 2000.10.01 ஆந் திகதியிலிருந்து செலுத்த வேண்டும். ஆயினும் ஓய்வுபெற்ற திகதியிலிருந்து 2000.09.30 ஆந் திகதி வரையிலான நிலுவை ஓய்வூச் சம்பளங்கள் 2001 ஆம் ஆண்டிலேயே செலுத்தப்படும்.

05. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: மஹிந்த மத்துசேன
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
shri-ts